ANC EDUCATION

உடனடி பிரசுரத்திற்கு
தொடர்புகளுக்கு: **Aruni Mahipala on 0777414415 and email aruni@ancedu.com**

# உன்னதமான 15 வருடங்களின் சிறப்பினை வெளிப்படுத்திய ANC பட்டமளிப்பு மற்றும் விருதளிக்கும் நிகழ்வு

***கலாநிதி. ஹர்ஷ டி சில்வா அவர்கள் மாற்றங்களை ஏற்று, மாற்றங்களுக்கான பொறுப்பினை கையில் ஏற்குமாறு வலிறுத்தினார்***
***ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனேடிய பல்கலைக்கழகங்களுக்கு 115 மாணவர் பரிமாற்றங்கள்***
***277 முழுமையான பட்டதாரி மற்றும் பட்டப்படிப்பு கற்கைநெறிகள்***
***மிகத்திறமையான மாணவர்கள் மற்றும் மிகச்சிறந்த ஆராய்ச்சிக்கட்டுரைகளுக்கு கௌரவிப்பு***

*2017 ஜூலை 29, கொழும்பு, இலங்கை :* பதினைந்து வருடங்களுக்கு முன்னரே இலங்கையில் கால்பதித்த நாட்டின் முதன்மை தனியார் துறை கல்வி நிறுவனமான ANC ஆனது, இலங்கையிலுள்ள இளைஞர்களுக்கு சரியான வாய்ப்பும் சிறந்த வழிகாட்டலும் அளிக்கப்படுமிடத்து, அவர்கள் தமது மகத்தான ஆற்றலை வெளிப்படுத்தியவாறு, உலகின் மிகச்சிறந்த ஆற்றலுடையவர்களுக்கு தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிலைநாட்டக்கூடிய சாத்தியத்தினைக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதியுடன் நிரூபித்துள்ளது. தனித்துவமிக்க மாணவர் பரிமாற்ற முறை ஊடாக வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வழியமைத்துக்கொடுக்கும் நோக்கத்துடன் களமிறங்கிய ANC Education ஆனது, தற்போது உலகளாவிய ரீதியில் 100ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுடன் இணைப்பினை பேணுவதுடன், முன்பள்ளி முதல் பட்டப்பின்படிப்பு வரையான அனைத்து கல்வி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒரே குடையின் கீழ் தமது துணை நிறுவனங்கள் ஊடாக பேணுகின்றது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார பிரதியமைச்சர் கலாநிதி. ஹர்ஷ டி சில்வா அவர்களின் தலைமையின் கீழ் இடம்பெற்ற பட்டமளிப்பு மற்றும் விருது இரவு நிகழ்வில், ANC ஆனது ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் பெற்றுச்செல்லும் 115 மாணவர்களுக்கும் தமது பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பாடநெறிகளை பூர்த்தி செய்துள்ள 277 மாணவர்களுக்கும், அவுஸ்திரேலிய அடிப்படை டிப்ளோமா மற்றும் இதர பாடநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கும் கௌரவமளித்து அங்கீகரித்தது.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட கலாநிதி. ஹர்ஷ டி சில்வா அவர்கள் இன்று இலங்கையில் முன்னெப்போதுமில்லாத வகையில் படித்த இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதென்றும், இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து நாடு அதன் அனுகூலத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். "எமது அரசாங்கம், கல்விக்கான எல்லைகளை விஸ்தரித்தல் குறித்து அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. ஆயினும் உயர் கல்வி வாய்ப்புக்கான தகைமையினை கொண்டு, அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படக்கூடியவர்களில் 85% ற்கான வாய்ப்பினை அரசாங்கத்தினால் மாத்திரம் வழங்க முடியாது. இங்கு தான், தனியார் துறையினர் தமது பங்களிப்பினை நல்குகின்றனர். இவ்வாறான இளம் இலங்கையர்கள் தமது கற்றல் வாய்ப்பினை பெற்றுக்கொள்தலை உறுதிப்படுத்தும் உன்னத சேவையினை ANC ஆனது அளிக்கின்றது" என்று தெரிவித்ததுடன், வழமையான வேலை வாய்ப்புகள் இப்போது காணப்படுவதில்லை என்பதை இளையோர் மத்தியில் சுட்டிக்காட்டிய அமைச்சர் "மாற்றத்தினை எதிர்கொள்ள தயார்நிலையில் இருங்கள். மாற்றம் என்பது நவீன வாழ்க்கைமுறையின் அடிப்படையாக திகழ்கின்றது. மாற்றத்திற்கு ஏற்றவகையில் மாற்றமடைதல் என்பது அடிப்படை திறனாக விளங்குகின்றது" என்பதை வலியுறுத்தினார்.

இளங்கலை, பட்டதாரி, பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளை பன்முக பரப்புகளின் கீழ் அளிக்கும் இலங்கையின் ஒரேயொரு பன்னாட்டு கல்விக் குழுமம் என்ற வகையில், ANC ஆனது சட்டட முதுமாணி, விஞ்ஞான முதுமாணி, வர்த்தக நிர்வாக முதுமாணி கற்கையினை University of West London இல் பூர்த்தி செய்தோருக்கும், அமெரிக்காவின் Northwood University மற்றும் Missouri University of Science & Technology ஆகியவற்றிலிருந்து பட்டதாரிகளானோருக்கும் பட்டமளித்து கௌரவித்தது. UWL இன் LLM, MBA மற்றும் MSc ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களில் கல்வி பயின்று மிகச்சிறந்த மாணவர்களாக ஜயனி லக்மினி டி சில்வா மற்றும் ஷிரோமினா புவனேந்திரன் ஆகியோர் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேஷனா எனக்ஷி டி அல்விஸ் Northwood University இல் இருந்து சிறந்த மாணவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜயனி லக்மினி டி சில்வா, LLM நிகழ்ச்சித்திட்டத்தின் மிகச்சிறந்த ஆராய்ச்சிக்கட்டுரைக்காக விருதளித்து கௌரவிக்கப்பட, ஜயலிய சாருக்ய டி சில்வா மற்றும் லசந்த திரங்கம ஆகியோருக்கும் குறித்த கௌரவம் அளிக்கப்பட்டது. ஆய்ஷா ஷகானி ஃபருக், உஷானித் சத்தியமூர்த்தி மற்றும் சத்துர விஜயநாயக்க ஆகியோர் MBA மற்றும் MSc நிகழ்ச்சித்திட்டங்களில் மிகச்சிறந்த ஆராய்ச்சிக்கட்டுரைகளை சமர்ப்பித்தமைக்காக விருதுகளை பெற்றனர்.

ANC இன் தலைவர் என்ற வகையில் கருத்துரைத்த கலாநிதி. ஜகத் அல்விஸ் அவர்கள் "உலகளாவிய ரீதியில் உயர் தரப்படுத்தலை கொண்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கான அணுக்கத்தினை இலங்கையர்கள் கொண்டுள்ளனராயின், அதற்கு ANC ஆனது இலங்கையில் கல்விக்கான நோக்கத்தினை சாத்தியப்படுத்தியுள்ளமையே காரணமாகும். இன்றைய நவீன காலத்தில், இலங்கையானது, சர்வதேச வாய்ப்புகளை இதனூடாக அதிகரித்துக்கொள்ள முடியும். ANC இல் உள்ள நாம், பன்முக உயர் கல்வித்தரத்தினை அளிக்கும் கற்கை பீடங்களை கொண்டுள்ளமை குறித்து பெருமையடைகின்றோம். இந்த பீடங்கள் ஊடாக தாய்ப் பல்கலைக்கழகம் அளிக்கும் உயர் தரம் மிக்க கல்வித்தரத்தினை சிறந்த செயலாற்றலுடன், பங்குடமை பல்கலைக்கழகங்களின் தொடர்ச்சியான சான்றளித்தலுடன் கொடுத்தலை உறுதி செய்ய முடிகின்றது" என்று தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் ANC ஆனது, அவுஸ்திரேலிய அடித்தளம் (Australian Foundation),நேரடி வாய்ப்பளித்தல் முனைப்பு மற்றும் Deakin பல்கலைக்கழகத்திற்கான டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றுடன் உடல் ஆரோக்கியம் மற்றும் மருத்துவ உளவியல் M.Sc, UWL இன் விருந்தோம்பல் முகாமைத்துவ MBA, SUNY ESC இடமிருந்தான உளவியல் B.Sc, Emirates Hospitality Academy இடமிருந்தான பட்டப்படிப்பு ஆகிய பல புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தியது. "இவை இந்த தொழிற்துறையில் புதிய வாய்ப்புகளை ஆரம்பித்து வைப்பதுடன், சவால் மிகுந்த உலகில், புதிய வாய்ப்புகளை உருவாக்கி அளித்தல் ஆகியவற்றிலும் ANC ஆனது, முன்னிலை வகிப்பதை உறுதிப்படுத்துகின்றது" என்று ANC நிறைவேற்று பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி. புன்ரஜீவ கருணாநாயக்க அவர்கள் தெரிவித்தார். "உங்கள் சிந்தனைகளில் பகுப்பாய்வு திறன்களை கொண்டிருப்பதுடன், ANC இல் நீங்கள் கற்றறிந்தவற்றை உங்கள் தொழீல்வாழ்க்கையில் பிரயோகிப்பதுடன், கற்றல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேணடும்" என்பதையும் வலியுறுத்தினார். ANC அளிக்கும் இந்த ஆழம் மற்றும் அகலமிகு அனுபவமானது, ANC மாணவர் ரக்கித்த மலேவன அவர்கள் Queen's Young Leader விருதினை தமது சமூகம் சார்ந்த செயற்பாடுகளுக்காக மாட்சிமை பொருந்திய மகாராணி Queen Elizabeth II அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க உயர்ஸ்தானிகராலயத்தின் கலாசார விவகார அலுவலர் Joseph Schaller அவர்கள் இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இடையிலான வலுவான கல்வி தளைகள் குறித்து வெளிப்படுத்துகையில் "உயர்கல்வியைத் தொடர்வதற்கான முதன்மை விருப்பத்தெரிவாக விளங்கும் அமெரிக்காவில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் 3000 ற்கும் மேற்பட்டவர்கள் இலங்கை மாணவர்களாவர்" என்று தெரிவித்த அவர், கல்வியின்

பெறுமதியினை உணர்ந்துள்ள ANC ற்கு தமது பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டார். இதனை உறுதிப்படுத்திய Northwood University துணை உதவித்தலைவரும் சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பீடாதிபதியுமான கலாநிதி. Mamiko Reeves அவர்கள் ANC மற்றும் Northwood ஆகியவற்றுக்கிடையிலான ஒருங்கிணைப்பானது, மாணவர்களுக்கு நிகரற்ற அனுபவத்தினை அளிக்கின்றது என தெரிவித்தார். “நீங்கள் புதிதய அனுபவத்தினை முயற்சிசெய்து, உங்கள் சாத்தியங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். சவால்களை எதிர்கொள்ளுங்கள். உங்கள் தவறுகளிலிருந்து பாடங்கள் கற்றுக்கொள்ளுங்கள். நிஜ உலகிற்குள் நுழைந்து, மாற்றத்தினை ஏற்படுத்துங்கள்” என்று குறிப்பிட்டார். இதனை தமது கருத்தில் பிரதிபலித்த University of West London துணைவேந்தர் பேராசிரியர் Peter John அவர்கள், தனியார் கல்வித்துறையின் அறிமுகத்தினை முன்னிலைப்படுத்தியமைக்கு ANC ற்கு தமது பாராட்டுதல்களை அளித்ததுடன் “உங்கள் பட்டப்படிப்பு தகைமையானது, உங்கள் அறிவாற்றலை பேணி செயற்திறனாக்கும் ஒரு சொத்தாகும். உங்கள் அனுகூலங்களுக்காக அதனை பயன்படுத்துங்கள்” என்று தெரிவித்தார்

*#முடிவு#*